**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**OS.118/2023**

நாள்.17.06.2025

**வா.சா.1. பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

பிரதிவாதி மற்றும் அவரது மகள்கள் குடியிருப்பதற்கு தாவா சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் எதுவும் கிடையாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் தொகை கொடுத்தது தொடர்பாக ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்துக்களை நான் வாங்கியதாக சொல்வதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது மனைவி மற்றும் பிள்ளைகளை சேதப்படுத்தியது சம்பந்தமாக எனது மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் விசாரணைக்கு ஆஜராகி பிரதிவாதிகளிடம் எவ்வித பிரச்சனையும் செய்ய மாட்டேன் என எழுதிக்கொடுத்துள்ளேனா என்றால் ஆம் எழுதிக்கொடுத்துள்ளேன். தாவா சொத்தில் நான் கட்டிடம் கட்டியதாக சொல்வதற்கு ஆதரமாக ஏதேனும் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் பட்டா, இன்ன பிற அரசு வரி விதிப்புகள் பிரதிவாதியின் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு தனிப்பட்ட உரிமையுள்ள சொத்துக்களை நான் பாக வீதம் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. நான் தான் பிரதிவாதியையும், பிள்ளைகளையும் தொந்தரவு செய்தேன் என்றும், பிரதிவாதிகள் என்னை ஏதும் தொந்தரவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்கள் ஏதும் இவ்வழக்கிற்கு வலுவூட்டக்கூடியது அல்ல. நான் ஒரு அரசியல் கட்சியில் முக்கியப்பொறுப்பில் இருந்து வருகிறேன். பிரதிவாதிகள் என்னை மிரட்டுவதற்கு எவ்விதமான ஆள்பலமும் கிடையாது என்றும், நான் தான் எனக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பிரதிவாதிகளை மிரட்டியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. கடந்த 29.06.2021 அன்று பகல் 12.00 மணியளவில்

என்னிடம் வீண் சண்டை, சச்சரவுகள் ஏற்படுத்தியும், கெட்ட வார்த்தைகளால் திட்டியும், அடித்து உதைத்தும், என்மீது வெந்நீரை ஊற்றினார்கள் என்றது பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. இந்த பிரதிவாதி தாவா சொத்தை விற்பனை செய்து அந்த தொகையை கையடக்கம் செய்ய எண்ணம் ஏதும் இல்லை என்றும், வழக்கிற்காக வழக்குமூலம் உற்பத்திக்காக என்னால் பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் கண்டுள்ள பரிகாரங்கள் ஏதும் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும் சரியல்ல. அதுபோல வழக்கு சொத்து எனக்கு உரிமையில்லாத நிலையில் பிரதிவாதிகள் தனிப்பட்ட சுயாஜித சொத்தை பொறுத்து என்னால் பாக பிரிவினை பரிகாரம் கோரி என்னால் எவ்வித வழக்கும் தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :– இல்லை**

| |
|---|
| Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.<br><br>Subordinate Judge,<br>Thiruthuraipoondi. |